சென்னை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

**ந.க.எண். 6354 / ஈ2/2022, நாள். 06.09.2022**

**பொருள் :** பள்ளிக்கல்வி நுழைவுத் தேர்வு முடிவுகள் 2022 - 23 நுழைவுத் தேர்வு எழுதிய மாணவர்களுக்கான ஆலோசனை மற்றும் உயர்கல்வி வழிகாட்டல் பெற்றோர் மற்றும் மாணவர்களை பள்ளிக்கு வரவழைத்து வழிகாட்டுதல்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்கலுக்கான சுற்றறிக்கை - சார்ந்தது

**பார்வை:** பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள் சென்னை 6 , ந.க.எண். 019528 / எம்/இ1/2022, நாள். 06.09.2022

-----

பார்வையில் காணும் செயல்முறைக்கிணங்க 2022-2023 கல்வியாண்டில் பன்னிரண்டாம் வகுப்பு முடித்த மாணவர்கள் உயர் கல்வியில் சேர உள்ளனர் , பொறியியல் கலந்தாய்வு வரும் நாட்களில் தொடங்க உள்ளது கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கான மாணவர் சேர்க்கையும் நடந்து கொண்டிருக்கிறது மேலும் உயர் கல்வி குறித்த பல்வேறு நுழைவுத் தேர்வுகளில் முடிவுகள் வர இருக்கிறது, இந்நிலையில் பள்ளிகளில் 07.09.2022 முதல் 09.09.2022 வரை உயர் கல்வி குறித்த ஆலோசனைகள் கல்லூரி சேர்கை குறித்த தகவல்கள் , தேர்வு முடிவுகள் எதிர்கொள்ளுதல் மற்றும் திட்டமிடுதல் சார்ந்து ஆலோசனைகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அனைத்து வகையான அரசு மற்றும் சென்னை மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் 2022 -23ம் ஆண்டில் உயர் கல்வி பயில இருக்கும் மாணவர்களையும் அவர்தம் பெற்றோரையும் வருகிற 07.09.2022 செவ்வாய்க்கிழமை முதல் 09.09.2022 வரை கீழ்காணும் வழிமுறைகளை பின்பற்றி பள்ளிகளுக்கு வரச் செய்து உயர்கல்வி வழிகாட்டுதல்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஆலோசனை மற்றும் வழிகாட்டல் வேண்டி பள்ளிக்கு வரும் மாணவர்களுக்கு உயர் கல்வி வேலை வாய்ப்பு பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக்கொண்டு தகுந்த ஆலோசனைகள் மற்றும் பிற வாய்ப்புகள் குறித்து தகவல்களை அளித்து உதவ வேண்டும்.

கூடுதல் உதவிகளுக்கு **மாவட்ட முதன்மை கல்வி அலுவலகத்தால் அமைக்கப்பட்டுள்ள, மாகாண மகளிர் மேல்நிலைப்பள்ளி எழும்பூர் சென்னை 8 பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு மையத்தில் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை**

ஆலோசகர்களை அணுக மாணவர் மற்றும் பெற்றோருக்கு வழிகாட்ட வேண்டும் ஆலோசனையின் போது மாணாக்கர் உயர்கல்வி மற்றும் போட்டித் தேர்வு முடிவுகள் குறித்து ஏதேனும் கவலையாகவோ பதட்டமாகவோ அல்லது குழப்பமான மனநிலையில் இருக்கிறார் என்பது கண்டறியப்படும் பட்சத்தில் 14417 அல்லது 104 உதவி எண்ணிற்கு, அல்லது முதன்மை பயிற்சியாளர்களின் கீழே உள்ள அலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொள்ள செய்தல் வேண்டும்.அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்களும் மேற்கண் வழிமுறைகளை பின்பற்றி உயர்கல்வி பயில்வதற்கு மாணவர்களுக்கு உரிய ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

மேலும் தொடர்புக்கு

1 வேலுமணி 9952975069

2 எழிலரசி 9941264523

3. கலாமணி 9840003448

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை

பெறுநர்

1 அனைத்து அரசு மற்றும் சென்னை பள்ளி தலைமை ஆசிரியர்கள் சென்னை மாவட்டம்

2 அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் சென்னை மாவட்டம்

(தொடர் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு)